# திருக்குறள்

**13. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

பொருள் :

தன்னை தோண்டுவோரையும் தாங்கிக் கொண்டிருக்கும் நிலத்தைப் போல் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலையாயப் பண்பாகும்.

**14. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.**

பொருள் :

துன்பம் செய்தவரை தண்டிக்க நினைத்தால் அவர் வெட்கப்படும்படி அவருக்கு நன்மைகள் செய்து தீமையை மறந்து விட வேண்டும்.

**15. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.**

பொருள் :

படிக்க வேண்டிய புத்தகங்களை ஆழ்ந்து குற்றமில்லாமல் படிக்க வேண்டும். படித்த பிறகு அதில் சொல்லியபடி நடக்க வேண்டும்.

**16. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.**

பொருள் :

மணலில் உள்ள ஊற்று தோண்டிய அளவே நீர் சுரக்கும். அதுபோல மனிதர்களுக்குப் படித்த அளவே அறிவு சுரக்கும்.